விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 14 ரபி - ஆகி 6 இதழ் 315
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-12-84

## ரஜீவிடம் மேனகா படுதோல்வி!

### கட்டுப் பணத்தையும் இழந்தார்!!

(புதுடில்லி)

பிரதமர் திரு. ரஜீவ் காந்தியிடம் அமேதி தேர்தல்தொகுதியில் அவரது மைத்துனியான திருமதி மேனகா காந்தி படுதோல்வியடைந்தார்.

ராஷ்டிர சஞ்சே மந்திர் என்ற தமது கட்சி சார்பில் திருமதி மேனகா காந்தி படுதோல்வியடைந்துள்ளதுடன் கட்டுப்பணத்தையும் இழந்துள்ளார்.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான திரு. ரஜீவ் காந்தி அமேதித் தொகுதியில் 90 சதவீதத்துக்குமதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளார். திருமதி மேனகா 10 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றிருந்தார்.

தேர்தல்வேட்புமனு தாக்கல் செய்ததிலிருந்து மேனகா

(6-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

## புதுடில்லி 7 தொகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ் வெற்றி!

### சீக்கியர்களும் வாக்களிப்பு!!

(புதுடில்லி)

புதுடில்லியிலுள்ள சகலஏழு தேர்தல் தொகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இங்கு சீக்கிய இனத்தவர்கள் வாக்களிப்பைப் பகிஷ்கரிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது ஆனல் எதிர்பார்த்

(6ம்பக்கம் 3ம் கலம் பார்க்க)



# ரஜீவ் சரித்திர வெற்றி!

# தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர்!

(புதுடில்லி)

**இந்தியப் பொதுத் தேர்தலில், பாரத நாடே எதிர்பார்க்காத வகையில் இந்திரா காங்கிரஸ் 'இமயமலை' வெற்றியீட்டியுள்ளது! தமிழ்நாட்டில் அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகம் முன்னணியில் உள்ளது.**

திருமதி இந்திரா காந்தி படுகொலையுண்ட இரண்டு மாத காலத்திற்குள் நாடு தழுவிய தேர்தலை நடத்தி எழுபது சதவீதத்துக்கும் அதிகமான இடங்களை இந்திரா காங்கிரஸுக்கு எடுத்துக்கொடுத்ததன் மூலம், பிரதமர் திரு. ரஜீவ் காந்தி சரித்திர நாயகனாகிவிட்டார்!

நடந்து முடிந்த தேர்தல்களில் 1977-ம் ஆண்டு தேர்தல் தவிர்ந்த சகல தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி பெற்றிருந்தபோதிலும் இந்த எட்டாவது தேர்தலில்தான் ஆகக்கூடுதலான இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

நடந்துமுடிந்த லோகசபைத் தேர்தலில் யாருமே எதிர்பாராத வகையில் எதிர்க்கட்சிகளின் முக்கிய தலைவர்களையெல்லாம் 'கபளீகரம் செய்த இந்திரா காங்கிரஸ்; இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற செய்திகளின் படி லோகசபையில் நானூற்றுக்கும் அதிகமான இடங்களைக் கைப்பற்றும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

### நெடுஞ்செழியன் அன்பழகன் வெற்றி

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் அ.இ. அண்ணா தி மு கழகம் தனது தோழமைக் கட்சிகளுடன் முன்னணியில் நிற்கிறது.

மதுரையில் திரு. இரா. நெடுஞ்செழியன் தமது தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார் இத்தொகுதியில் தி. மு. க. வேட்பாளரைவிட 29 573 கூடுதல் வாக்குகள் பெற்றுள்ளார்.

தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. அன்பழகன் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் வேட்பாளரை விட 2,927 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

திருச்சியில் முசிறிப்புத்தன் வெற்றிபெற்றுள்ளார்.

### ரஜீவ் எம். ஜி. ஆர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை - அதாவது இன்று அதிகாலை ஒன்றரை மணிவரை பிரதமர் திரு. ரஜீவ் காந்தியினதும், தமிழக முதல்வர் திரு. எம். ஜி ராமச்சந்திரனதும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. திரு. ரஜீவ் 73,00) வாக்குகளினாலும் திரு எம் ஜி. ராமச்சந்திரன் 30,000 வாக்குகளினாலும் முன்னணியில் நிற்பதாகவே அறிவிக்கப்பட்டது.

●பிந்திய செய்தியின்படி எம். ஜி. ஆர். 33,000 வாக்குகளால் வெற்றி பெற்றார்!

### ஆந்திராவில் மட்டும்...

இந்திரா காங்கிரஸைப் பொறுத்தவரை ஆந்திரப் பிரதேச மாநிலம் தவிர மற்றைய எல்லா முக்கிய மாநிலங்களிலும் முன்னணியில் நிற்கிறது ஆந்திர பிரதேசத்தில் தெலுங்கு தேசக் கட்சி முன்னணி வகிக்கிறது.

### சோமசுந்தரம் தோல்வி

அ இ அ. தி. மு. கழகத்தில் அமைச்சராக இருந்து வெளியேறி நமது கழகத்தை ஆரம்பித்துப் போட்டியிட்ட திரு. எஸ். டி சோமசுந்தரம் தோல்விகண்டுள்ளார்

இது வரை வெளியான முடிவுகளின் படி தமிழ் நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தலில் தி மு. கழகம் பெரும் தோல்வியைக் கண்டுள்ளது.

### சுனில்தத் வெற்றி

மஹாராஷ்டிராவில் வடமேற்கு பம்பாயில் போட்டி

(6-ம் பக்கம் 4ம்கலம் பார்க்க)

## நியுயோர்க்கிலிருந்து நம்பிக்கை வெளியிட்ட தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்.!



### ✶ இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற தேர்தல் முடிவுகள்:

## ஒரே பார்வையில்...

இந்திய லோக சபைத் தேர்தலில் போட்டியிட்ட முக்கிய அரசியல் கட்சிகள் பெற்றுள்ள இடங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ✶ மொத்த இடங்கள் | – | 515 |
| இந்திரா காங்கிரஸ் | – | 176 |
| ஜனதா | – | 08 |
| பாரதிய ஜனதா | – | 02 |
| காங்கிரஸ்-எஸ் | – | 03 |
| தெலுங்கு தேசம் | – | 19 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் | – | 07 |
| சுயேச்சைகள் | – | 07 |

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட முக்கிய அரசியல் கட்சிகள் பெற்ற இடங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ✶ மொத்த இடங்கள் | – | 232 |
| இந்திரா காங்கிரஸ் | – | 41 |
| அ. இ. அ. தி. மு. க. | – | 79 |
| தி. மு. க. | – | 09 |
| ஜனதா | – | 03 |
| சுயேச்சை | – | 01 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் | – | 04 |

# கொழும்பு பிரதான இராணுவ தலைமையகம் வவுனியாவுக்கு மாற்றம்!

## வடக்கில் இராணுவ, கடற்படைத்தளங்கள் மேலும் அதிகரிப்பு!

(கொழும்பு)

''கொழும்பிலுள்ள நாட்டின் பிரதான இராணுவத் தலைமையகம் விரைவில் வவுனியாவுக்கு மாற்றப்படும். வடக்கே மேலும் அதிகளவில் இராணுவமுகாம்கள் அமைக்கப்படும்'' என்று தேசிய பந்தோபஸ்த்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

நிவித்திகலை என்னுமிடத்தில் பொதுக்கூட்டமொன்றில் அவர் கடந்த வாரம் உரையாற்றினர். அப்போதே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

அமைச்சர் அத்துலத் முதலி மேலும் அங்கு கூறியதாவது: ''கடந்த மார்ச் மாதம் வரை வடபகுதியில் ஆறு இராணுவ முகாம்களே இருந்தன. ஆனல் தற்போதுஇத் தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. மேலும் பல முகாம்கள் இங்கு விரைவில் அமைக்கப்படும்.

இவற்றுடன் கடற்படைத் தளங்களும் வடக்கில் அதிகரிக்கப்படும். இம்மாத இறுதியில் எப்போதுமில்லாதவாறு வடக்கில் ஆயுதப் படைப்பலம் அதிகரிக்கப்படும்.

வடபகுதியில் இராணுவ நிலைகள் அதிகரிக்கப்படுவதால் இந் நாட்டின் பிரதான

[6-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

### அனாதரவான நிலையில் ஜீப்

(கல்வியங்காடு)

யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அண்மையில் ஜீப் வண்டி ஒன்று கைவிடப்பட்ட நிலையில் நேற்றுக் காணப்பட்டது. [illegible] காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் கைதடி றேட், மல் 16×10 அளவுள்ள கிறசர் மெஷினும், காணியும், E N 9535 தொடர்பிலக்க A 50, (கேம்பிறிஜ்) காரும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு:- இ பாலகிருஷ்ணன், இருபாலை வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1135

45 நாள் சுத்தமான அல்சேசன் (Pine Alsation) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ச. தியாகராசா, கேணியடி லேன், திருநெல்வேலி. (1077)

வை. சி. சி. கு. திறம்சுருட்டு 1-1-85 தொடக்கம் 50 பலாலி வீதி கந்தர்மடத்திலும் காலையில் பெற்று கொள்ளலாம் (விற்கப்படும்) 1134

மிகச்சிறந்த நிலையில் உள்ள 12 ஸ்ரீ 8145 DATSUN SUNNY B 211 விற்பனைக்குண்டு. இல. 68, கலட்டி அம்மன் வீதி, வண்ணார் பண்ணை 1110

முட்டையிடத் தொடங்கி மூன்று மாதமான சிகப்பு வெள்ளை நிறமான (Shetna Farm) 200 கோழிகளும் தகரத்திலான அதன்கூடும் விற்பனைக்கு- விசாரிக்கவும் கண்ணன் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலிசந்தி. 1127

கிளிநொச்சி கனகபுரத்தில் இரண்டு ஏக்கர் காணி வீடு கட்டவும், மேட்டுப்பயிர் செய்யவும் உகந்தது. S. அந்தோனி, மிருக வைத்தியக் கந்தோர், கிளிநொச்சி. 1111

குளிர்சாதனப் பெட்டி, ஸ்ரீடியோ செற் (காற்ருடி) வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி இ. தா மகுமார், 'கோகில பவனம்' ஏழாலை வடக்கு ஏழாலை. 1102

யாழ். மாநகர எல்லைக்குள் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் அத்தியடி புது வீதியில் 5 அறை வீட்டுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- A. S. அருளானந்தம் 8B புது வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 1120

சிறந்த வியாபாரம் நடப்பதும் சகல பொருட்களும் துரித விற்பனை செய்யக்கூடியதுமான கடை குத்தகைக்கு கிடைக்கும். 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1118

வெளிநாடு செல்லவிருப்பதால் சமையல் அறைப்பாத்திரங்கள், காற்ருடி, கொட் (Cot) உட்பட வீட்டுத்தளபாடங்களை மலிவு விலையில் விற்பனை செய்யவுள்ளோம். நேரில் வரவும். திருமதி எம். ரெதராஜா, 69, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1121

யாழ்ப்பாணம் — கண்டி பிரதான பாதையில், கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில், ஏ. கே. ஆர். மாடிக் கட்டடம் அருகில் பதினேழு அடி அகலமும் நூற்று நாற்பது அடி (உட்புறமாக) நீளமும் கொண்ட காணி, ஒரு மாடிக் கடையுடன் விற்பனைக்குண்டு. இதற்கருகில் பிரதான பாதையிலேயே பத்து அடி அகலமும் முப்பத்து ஐந்து அடி நீளமும் கொண்ட காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. விளம்பர இல; 1087, C/o 'ஈழநாடு'. (1087)

## தேவை

அச்வேலியில் உள்ள எவர் சில்வர் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்திற்கு கீழ்க்காணும் அனுபவமுள்ள வேலையாட்கள் உடன் தேவை. ஒட்டுனர், (Welders) பொருத்துனர், (Fitters) ஸ்பின்னேஸ், (Spenners) Lathemen, Hot Dip Galuanizing உடன் விண்ணப்பிக்கவும். எவர்சில்வர் இன்டஸ்றீஸ், கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி, 1113

சுண்டிக்குளிச் சூழலில் தாயும், படித்துத்கொண்டிருக்கும் மகளும் தங்குவதற்கு அறை அல்லது அனெக்ஸ் தேவை. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அயல் விரும்பத் தக்கது. வாடகை விபரத்துடன் தொடர்பு: திருமதி சிவப்பிரகாசம், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். 1122

அனுபவம் உள்ள மின்தறி நெசவாளர் (பெண்கள்) உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஏ. ஜெரூட், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, அந்தோனியார் கோவில் முன்பாக, சுன்ளுகம். 1117

அனுபவமும் திறமையும் உள்ள றேடியோ திருத்துனர் (Radio Technishans) தேவை உடன் நேரில் வரவும். EXPO ELECTRONICS NO 45 KASTHURIAR ROAD, JAFFNA. 1132

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல: 84 அ-பிரிவுகள் 524,532)

யாழ்ப்பாணம்

மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற கொழும்பு வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 17ம் இலக்கத்தைச் சேர்ந்த ஜோர்ஸ் மதுரநாயகம் அஸ்பரி என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

திருமதி நீலா அமிர்தா ரோஜினி கதிர்காமர் ஜோன் ஜேசுதாஸன் அஸ்பரியின் மகள். இல. 8, இன்றநாஷனல் புடிஸ்ட் சென்றர் றேட், வெள்ளவத்தை, கொழும்பு

—மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்] இல: த / 3800

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985 ஆம் ஆண்டு தை மாதம் 4ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்ருர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

கு. குலசிங்கம்

பதிவாளர்

1984 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

இ. பாலசுப்பிரமணியம்,
சட்டத்தரணி.
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். 1140

## பயிற்சி

நவீன முழுமையான தையல் பயிற்சியும் மனையியல் பயிற்சி வகுப்புக்களும் மீண்டும் 6-1-85 ஆரம்பமாகின்றன. மேலும் விபரங்களை சனி, ஞாயிறு நாட்களில் அறிந்து கொள்ளலாம். S. T. C. A. சிவன் பண்ணை றேட், கொட்டடி, யாழ்ப்பாணம். 1133

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா செல்லத்துரையின் மரண சாதனமில்லா சொத்துக்கள் தொடர்பான விடயத்தில்

—மரணமெய்தியவர்

வழக்கு இல.
தத்துவம்/217

கந்தையா செல்லத்துரை கைம்பெண் புவனேஸ்வரி உடுவில் தெற்கு, சுன்ளுகம்

—மனுதார்

எதிராக

1. செல்லத்துரை இராஜா சுரேஷ்
2. செல்லத்துரை சுரேஷ்ராஜா, பராயமடையாதவர்
3. பொன்னையா தருமலிங்கம் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

—எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ஆம் ஆண்டு தை மாதம் 23ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1984ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 15ந் திகதி.
இன்று முத்திரையிடப்பட்டது
என்னுல் வரையப்பட்டது

க. அரியநாயகம்
மனுதாரின் சட்டத்தரணி
(1119)

## வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்வாகன உடைமைக்கும் வாகனப் பாவனைக்குமான அதிகாரம் வழங்கும் அனுமதிப் பத்திரங்கள் தற்போது துரித கதியில் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பெறுவதற்கு பெரும் தொகையான மோட்டார் சைக்கிள், கார், மினிவான், லொறி ஆகிய வற்றின் உரிமையாளர்கள் இந்த அலுவலகத்தில் தினமும் வருகின்றனர். உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் இந்த அனுமதிப்பத்திரங்களை தாமதமின்றி வழங்குவதற்கான ஒழுங்குகளை செய்துள்ளார். அலுவலக ஊழியர்களும் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.


# SCIENCE ACADEMY
JAFFNA.

சகல A/L வகுப்புக்களும்
29 12 84 தொடக்கம் ஆரம்பம்
A/L 85 Paper Classes ஆரம்பம்
GANA'S ACADEMY
தட்டாதெரு சந்தி.
1-1-85 தொடக்கம் வகுப்புக்கள் நடைபெறும்.
விபரங்கள் நேரில்
A/L 85, 86 தினசரி நடைபெறும்.



எங்கள் புதுவருட
புதிய வெளியீடுகள்
மோகன் — சாதனு
அன்பே ஓடிவா
(EMPIRE ORIGINAL)
சரத்பாபு — ஜோதி
வில்லியனூர் மாதா
(PYRAMID ORIGINAL)
உங்கள் ஓடர்களை உடன் பதிவு செய்துகொள்ளுங்கள்.
எங்கள் அன்பான வாடிக்கையாளர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
புதுவருட வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்ருேம்.
குணம் வீடியோ சென்டர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்பபாணம்.
தொலைபேசி; 23665 (1123)


## 31-வது நாள் நினைவஞ்சலி

திருமதி பொன்னம்மா வேலாயுதம்

உதிர்வு: 29-11-1984



''அம்மா உங்கள் பிரிவால் எமது உள்ளம் குமுறுவதை எப்படி ஆற்றுவோம். எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் நினைவு என்றுமே எம்மை விட்டு அகலாதே''

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

''பொன்வேல்'',
மாமூலை, முள்ளியவளை. (1129)


அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும்
எமது உளம் நிறைந்த
நத்தார் – புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக.



உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம்.
உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு கொடுப்போம்.
10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம்சோப் மேலுறைகளை அனுப்பி
அன்னை இந்திராவின் அழகிய ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய பாராளுமன்ற தேர்தல்:

# ஐந்து தொகுதிகளில் வாக்கு பதிவு ஒத்திவைப்பு

**புதுடில்லி, டிச 28 இந்திய பாராளுமன்றத் தேர்தலில் 5 லோக் சபைத் தொகுதிகளில் வாக்குப்பதிவு ஒத்திப் போடப்பட்டுள்ளது.**

உத்திரப் பிரதேசத்திலுள்ள ஒரு தொகுதியில் சுயேட்சை வேட்பாளர் ஒருவர் மரணமானதன் காரணமாக இத் தொகுதியில் தேர்தல் ஒத்திப் போடப்பட்டுள்ளது.

513 தொகுதிகளில் தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு 5 தொகுதிகளில் வாக்குப்பதிவு ஒத்திப்போடப்பட்டுள்ளது. மொத்தம் 508 தொகுதிகளில் மீசோராம் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மிகுதி 507 தொகுதிக்கும் வாக்குப் பதிவு நடைபெற்றது.

உத்திரப் பிரதேசத்தில் இரண்டு தொகுதிகள், மத்தியப் பிரதேசத்தில் போபால் தொகுதி, தமிழ்நாட்டில் வடசென்னை, ஆந்திராவில் சிறியால்புரம் ஆகிய ஐந்து தொகுதிகளிலும் வாக்குப் பதிவு ஒத்திப்போடபபட்டுள்ளது.

வடசென்னை, சிறியால்புரம், போபால் ஆகிய மூன்று தொகுதிகளிலும் ஜனவரி 28ம் திகதி தேர்தல் நடைபெறும்.

இந்தியாவின் மொத்த லோக்சபா தொகுதிகள் 542 ஆகும். (சூ-வெ)

## எம். ஜி. ஆர். உடல்நிலை

சென்னை, டிச 28

நியுயோர்க் புறூக்ளின் மருத்துவமனையில் மாற்று சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்குள்ளான தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நிலை நன்றாகத் தேறிவருவதாக அறிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் தற்போது தங்கியுள்ள வார்ட்டிலிருந்து ஓரிருதினங்களில் வெளியேறி, தமது அறைக்குத் திரும்புவாரென்றும் கூறப்பட்டது

முதலமைச்சர் சிறிது நடப்பதாகவும், பேச்சுப்பயிற்சி அவருக்கு அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முதலமைச்சருக்கு சிறுநீரகம் வழங்கிய அவரது சகோதரரின் புதல்வி திருமதி கீதாவும் நன்றாகவிருப்பதாக கூறப்பட்டது.

## புதுடில்லி ஆஸ்பத்திரியில் தீ விபத்து

### பெண்கள் சிறுவர்கள் சிக்கிக் கொண்டனர்

(புதுடில்லி)

புதுடில்லியிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டது. இத்தீவிபத்தில் சுமார் 300 பெண்களும், சிறுவர்களும் சிக்கிக்கொண்டதாக கூறப்பட்டது.

மின்சாரக் கோளாறே இத் தீவிபத்திற்கு காரணமென்று நம்பப்படுகிறது.

சிறுவர்கள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வவனியாவில் 8 கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளை

[வவனியா]

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் வவனியா நகரில் 9 கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப் பட்டுள்ளன.

இரவு வேளையிலேயே குறித்த சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதிவாய்ந்த பொருட்கள் களவாடப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அதே வேளையில் இங்குள்ள ஒரு பிரபல உல்லாச பிரயாண ஹோட்டல் ஒன்றும் சிவில் உடையில் வந்தவர்களினால் தாக்கப்பட்டுள்ளது. ஹோட்டலில் இருந்த தளபாடங்கள், மற்றும் உபகரணங்கள் அடித்து நொருக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## உணவுக்கட்டுப்பாட்டு படிவங்கள் படும்பாடு!

[சாவகச்சேரி]

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட பிரதேசத்தில் விநியோகிக்கப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டுப் படிவங்கள் இரு தடவைகள் இனந்தெரியாதவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டதை அடுத்து பல கிராம சேவையாளர்கள் மத்தியில், இப்பத்திரங்கள் தொடர்பாக பல பீதிகள் எழுந்துள்ளனவாம்.

குடியிருப்பாளர்களினால் பூர்த்தியாக்கப்பட்ட படிவங்களை கிராமசேவையாளர்கள் தத்தமது காரியாலயங்களிலேயோ அல்லது வீடுகளிலேயோ பாதுகாப்பாக வைத்திருக்க முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இதன் காரணமாக பூர்த்தியாக்கப்பட்ட படிவங்களை ஒவ்வொரு குடியிருப்பாளர்களையும் தத்தமது வீடுகளில் வைத்திருக்கும்படி கேட்டுள்ளாராம். பூர்த்தியாக்கப்பட்ட படிவங்கள் தேவைப்படும்நேரத்தில் தாமே சேகரித்துக் கொள்வதாகவும் கிராமசேவையாளர்கள் கூறியுள்ளார்.

## திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு மாத்தனை கந்தசுவாமி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முழுவதும் திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது.

## யாழ் செயலகத்தில்[redacted] 'பாஸ்போட்' விண்ணப்பங்களுக்கு தட்டுப்பாடு!

(சுண்டிக்குளி)

யாழ். செயலகத்தில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக 'பாஸ்போட்' விண்ணப்பிக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் இல்லாததால் பொதுமக்கள் மிகுந்த சிரமமடைந்துவருகின்றனர் இவ்விண்ணப்பப்படிவங்களுக்காக பொதுமக்கள் தினமும் யாழ் செயலகத்திற்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்கின்றனர். இதனால் வெளியிலுள்ள தனியார் நிறுவனங்களிலும் மற்றும் தரகர்களிடமும் மக்கள் அதிக விலை கொடுத்தே வாங்கவேண்டியுள்ளது. இப்படிவங்களுக்கு இவ்வளவு தட்டுப்பாடு ஏற்பட்டபொழுதிலும் யாழ். பாஸ்போட் அலுவலகத்திற்குத் தினமும் தற்போது 100 விண்ணப்பங்களுக்குக் குறையாமல் வந்துகொண்டேயிருக்கின்றது.

## பத்திரங்கள் கொழுத்தப்பட்டன

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலத்துக்குள் சென்ற இனம் தெரியாத வாலிபர்கள் அரசாங்கக்காரியாலயத்திற்குள் இருந்த உணவு விநியோக சம்பந்தமாகவும் குடியிருப்பாளர்களின் விபரங்கள் சம்பந்தமாகவும் அரசாங்கத்தினால் அண்மையில் கேட்கப்பட்டு பொதுமக்களால் நிரப்பட்டதும் நிரப்படாததுமான ஏராளமான படிவங்களை எடுத்துக் காரியாலத்தின் வளவிற்குள் போட்டு கொழுத்திவிட்டுச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

## காசோலை மூலம் சம்பளம்

(யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரி அமைய ஊழியர்களின் சம்பளப்பணம் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அடுத்த ஜனவரி தொடக்கம் அவர்களுக்கும் காசோலை மூலம் சம்பளம் வழங்க வைத்தி அதிகாரி முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## லைசென்ஸ் காலக்கெடு நீடிப்பு

[கொழும்பு]

மோட்டார் வாகனங்களுக்கான லைசென்ஸை புதுப்பிப்பதற்கான காலக்கெடுவை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அடுத்த ஆண்டு பெப்ரவரி 28-ம் திகதி வரை நீடித்துள்ளது.

## பிரிட்டன் வெளியுறவுத் துறையில் செலவுகளை குறைக்கிறது!

(அ. கனகசூரியர்)

பிரிட்டன் அடுத்த வருடத்திலிருந்து வெளியுறவுத்துறையில் செலவினக் குறைப்பைச் செய்யவிருக்கிறது. அதாவது பிரிட்டிஸ் அரசாங்கம் வருடந்தோறும் வெளிவிவகாரங்களுக்காக செலவிடும் பணத்தில் கணிசமான தொகையை அடுத்த வருடத்திலிருந்து மீதப்படுத்தவிருப்பதாக பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எடுக்கப்படவிருக்கும் சில நடவடிக்கைகளைப் பற்றியும் பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளிலுள்ள பிரிட்டிஷ் தூதரகங்களுள் சிறிய தூதரகங்கள் பத்து அடுத்த வருடத்திலிருந்து மூடப்படவுள்ளன.

ஆங்கிலமொழி, ஆங்கிலக் கலாச்சாரம் ஆகியவற்றை உலக மக்கள் மத்தியில் பரப்பிவரும் பிரிட்டிஷ் கவுன்சில் என்ற கலாச்சாரக் கழகத்திற்கு அடுத்தவருடம் வழங்கப்படும் அரசாங்க நிதியிலிருந்து 10 லட்சம் ஸ்டேர்லிங் பவுண் குறைக்கப்படவிருக்கின்றன.

பிரிட்டிஷ் சவுன்சிலைப் போலவே. பி.பி. ஸி. வெளிநாட்டு ஒலிபரப்புத் துறைக்கும் அரசாங்கம் வழங்கும் மானியத்தில் 10 லட்சம் பவுண் குறைக்கப்படவிருக்கிறது. முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட செலவினக் குறைப்பினால் பாதிக்கப்பட்ட பி பி. ஸியும் பிரிட்டிஷ் கவுன்சிலும் அடுத்த வருடம் மேற்கொள்ளப்படவிருக்கும் செலவினக் குறைப்பினால் பல முக்கியமான திட்டங்களைக் கைவிடவேண்டி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது 1981-ம் ஆண்டிலும் இதே போல 15 லட்சம் பவுண் செலவினக் குறைப்பு அறிவிக்கப்பட்டபோது பி பி. ஸியில் வெளிநாட்டு ஒலிபரப்புகளில் மூன்று மொழிச் சேவைகள் முற்றாகநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யுனஸ்கோ எனப்படும் ஐக்கிய நாடுகள் கல்வி, சமூக பண்பாட்டு விஞ்ஞான கழகத்திலிருந்தும பிரிட்டன் அடுத்த வருடம் வெளியேறவிருக்கிறது இதன்மூலம் 50 லட்சம் பவுண் ஆண்டொன்றுக்கு சேமிக்கக் கூடியதாக இருக்கும் எனச் சொல்லப்படுகிறது.

பிரிட்டன் வெளியுறவுத் துறையில் மேற்கொள்ளவிருக்கும் செலவினக் குறைப்பு சம்பந்தமான பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சரின் திட்டங்களுக்கு, பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் எட்வேர்ட் ஹீத், முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் உட்பட பல உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

## பாடசாலையில் தஞ்சம்

# பருத்தித்துறையில் 427 பேர் அகதிகள்!

(புலோலி)

பருத்தித்துறை சுப்பர்மடப் பகுதியிலுள்ள 71 குடும்பங்களைச் சேர்ந்த 427 பேர் வீடுகளைவிட்டு வெளியேறி அகதிகளாகி மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் குடியேறியுள்ளனர். இவர்களுக்கான உணவு வகைகளை வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர் வழங்கிவருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து சுப்பர்மடம் கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கத் தலைவர் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:

எமது கிராம மக்கள் மீன்பிடித்தொழிலையே நம்பிவாழ் [illegible] யம் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நாம் தொழிலை இழந்துவிட்டோம். எமது கிராமம் இராணுவ முகாமிற்கு மேற்கே சுமார் 200 யார் தூரத்திலுள்ளது.

பயமும் பீதியும் கொண்ட எமது மக்கள் உயிரைப் பாதுகாக்குமுகமாக (71 குடும்பங்கள்) கிராமத்தைவிட்டு இடம் பெயர்ந்து மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அகதிகளாகக் குடியேறியுள்ளோம். 10-12-84ல் நடைபெற்ற படைவீரர்களின் துப்பாக்கிப்பிரயோகத்தால் ஆடுகள் இறந்துள்ளன.

18ம் திகதி நான்கு படைவீரர்கள் கிராமத்துள் புகுந்து மூன்று வீடுகளுக்குச் சேதமேற்படுத்தியுள்ளனர். அன்றைய தினம் பாடசாலையில் தங்கியிருந்த 26 வயதுடைய இளம் பெண் வீட்டைப் பார்ப்பதற்குச் சென்றபோது மூன்று பாதுகாப்புப் படையினரால் கழுத்துநெரிக்கப்பட்டு பலவந்தப்படுத்தப்பட்டபோது முகாமைநோக்கி 'ஹெலிகாப்டர்' ஒன்று வந்ததால் அவர்கள் அப்பெண்ணை விட்டு ஓடிவிட்டனர்.

அகதிகளாக்கப்பட்டுள்ள எமக்கு உணவளித்து வரும் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர் தொடர்ந்தும் உதவிசெய்வதில் நிதிக்கஷ்டம் அனுபவித்துவருவதனால் எம்மை அரசாங்கம் பொறுப்பேற்று எமக்கு வசதியான குடியிருப்பு வசதிகளைச் செய்தும், வருவாய் இழந்து தவிக்கும் எமக்குப் போதிய நிதி உதவி வழங்கியும், குடிகளில்லாத எமது வீடுகளுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராணியாரை அழுது

## வரவேற்ற பண்டத்தரிப்பு மக்கள்!

(பண்டத்தரிப்பு)

சிலாபம் அதிமேற்றிராணியார் வண. மார்க்கஸ் பெர்னண்டோ நேற்றுக் காலை பண்டத்தரிப்பு தியான இல்லத்துக்கு விஜயம்செய்தார்.

சில்லாலை, பண்ணாகம், வடலியடைப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 300 பேர் அதிமேற்றிராணியாரை சந்தித்து அண்மையில் இப்பகுதியில் நடைபெற்ற ராணுவசோதனையின் போது பலர் கைதுசெய்யப்பட்டு இன்னும் விடுதலை செய்யப்படவில்லை என்றும் அவர்களை விடுதலைசெய்வதற்கு ஆவன செய்யுமாறும் கேட்டுக்கொண்டனர்.

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி மகஜர் ஒன்றை மேற்றிராணியாரிடம் கையளித்தார். இம்மகஜரில் இப்பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் நோயாளிகள் என்றும் இவர்களை விடுதலைசெய்வதற்கு முயற்சிகள் செய்யுமாறு கேட்டிருந்தார்.

மேற்றிராணியார் பின்னர் மாதகல் தோமையப்பர் ஆலயத்திற்குச் சென்று அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில், ''இங்குள்ள சகல பிரச்னைகளையும் மேலிடத்துக்குத் தெரிவித்து பரிகாரம் காணுவதாக உறுதியளித்தார்.

மாதகலில் கடற்தொழில் விரிவாக்கச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கடல் பாதுகாப்பு வலயத்தினால் கடற்றொழிலாளர் படும் பெரும் கஷ்டத்தை எடுத்துக் கூறினர்.

பீரங்கி குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட சேதங்களையும், அங்கு பாய்ந்த குண்டுகளையும் அவருக்குக் காண்பிக்கப்பட்டது

மேற்றிராணியார் வரும் போது அழுதழுது வரவேற்ற இப்பகுதி மக்கள் அவர் விடைபெற்றுச் செல்லும் போது அழுதழுது அனுப்பிவைத்தனர்.

### இலவச நூல்

[சுழிபுரம்]

திருவாதவூரடிகள் புராணச் செய்யுள் மட்டும் கொண்ட நூல் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது

ஆசிரியர் திரு. சி. மருதபிள்ளையினால் இலகுபடுத்தி யாவரும் சுலபமாக வாசிக்கத்தக்க வகையில் நூல் அமைந்துள்ளது.

நூல் விநியோகத்தை வழக்கம்பரை சனசமுக பஜனைச் சபையினர் செய்துவருகின்றனர். புராண படனங்களை நடாத்தும் ஆலய மடாலய முகாமையாளர்கள் நூல் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். ஆசிரியர் சி. மருதபிள்ளை சமயப் பணிக்காக பல நூல்களை இலவசமாக அச்சிட்டுள்ளார்.

### மேலும் பலருக்கு கடன்

(மன்னார்)

பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மன்னார் பட்டினத்தில் மேலும் பலருக்கு வீடமைப்பு கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மன்னார் பட்டினம் கிழக்கு கிராமோதய சபைத்தலைவர் ஜனாப் எச். எம். நிசாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

### விழிப்புக்குழு அங்குரார்ப்பணம்

(சுன்னாகம்)

மாதகலில் விழிப்புக்குழு கடந்த சனிக்கிழமை மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இக்குழுவில் நிர்வாகசபை ஒன்றும்: ஒவ்வொருவட்டாரத்திற்கும் ஒவ்வொரு கிளைக்குழுவும் அமைக்கப்பட்டன நிர்வாகக்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- வீ. கதிர்காமநாதன் செயலாளர்- மாட்டீன் உபதலைவர்- அமீர் செல்வகுமார் உபசெயலாளர்- ந. அன்னராசா.

நிர்வாகக்குழுத்தலைவர் கதிர்காமநாதன் கிளைக்குழுக் கூட்டத்தில் பேசுகையில்; ''கடந்த சில மாதங்களாக எமதுகிராமத்தை பீரங்கிக்குண்டுகள் தாக்குகின்றன. இப்படியான சம்பவங்கள் நிகழும்போது பாதிக்கப்படும் மக்களுக்குமுதலுதவி செய்யவேண்டிய பயிற்சிகளை இளைஞர்கள், யுவதிகளுக்கு அளித்தலும், முக்கியமாக நெருக்கடியான காலகட்டத்தில் எமதுகிராம மக்களின் உயிர்களையும், உடமைகளையும் பாதுகாக்கவுமே இக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கமாகும் என்றார்.

# இரு மதகுருமார் மீது இராணுவம் சோதனை

[கொழும்புத்துறை]

கிளிநொச்சியைச் சேர்ந்த இரு கத்தோலிக்க மதகுருமார் இராணுவத்தினரால் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

வண. பிதா. மதுரநாயகம் அடிகளார், வண பிதா. பயஸ் அடிகளார் ஆகிய இருவருமே இராணுவ சோதனைக்குட்படுத்தப்பட்டவர்களாவர். இரு கத்தோலிக்க குருமாரும் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபொழுதே யாழ். நகரில்வைத்து நீண்ட நேரம் சோதனையிடப்பட்டனர்.

வண. பிதா. மதுரநாயகம் அடிகளார் அணிந்திருந்த தொப்பி பாதுகாப்புப்படையினரின் தொப்பி போன்றிருந்தமையினால் அவர் அத்தொப்பி பற்றித் துருவித் துருவி விசாரிக்கப்பட்டாராம். வண. பிதா. பயஸ் அடிகளாரிடம் வீடியோ கசட் இருந்தது. அக்கஸட் சமய சம்பந்தமானதுஎன்று இராணுவத்தினரிடம் விளக்கப்பட்டது.

விசாரணையின் பின்னர் இரு மதகுருமாரும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

### ப. நோ. கூ. சங்கத்தில் கொள்ளை

(புலோலி)

இரவு ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கையில் புலோலி பல நோக்குக்கூட்டுறவுச்சங்க இணவொல்லை மக்கள் கடை உடைக்கப்பட்டு சுமார் 6,000 ரூபா பெறுமதியான பாவனைப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவே இக்கொள்ளை இடம் பெற்றுள்ளது. முன்புறகதவுகளை உடைத்த இக்கொள்ளைக் கோஷ்டியினர் அங்கிருந்த பீடி, பாக்கு, பால்மா வகைகள், சோப் வகைகள் ரோச் பற்றறிகள் ரின்மீன் போன்ற சுமார் 6,000 ரூபா பெறுமதியான பாவனைப் பொருட்களை இக்கொள்ளைக் கோஷ்டியினர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

### இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரஜைகள்குழு அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

யாழ்ரன் கனிஷ்ட வித்தியாலயத்தில் (வேம்படி) நடைபெறும் இக்கூட்டத்தில் ஓய்வுபெற்ற வட்டாரக்கல்வி அதிகாரி திரு ச. சபாபதிப்பிள்ளை, திரு. த. மாணிக்கவாசகன் ஆகியோர் உரைநிழ்த்துவர்.

### ஊரடங்கு நேரத்தில் கொள்ளை!

[மாவிட்டபுரம்]

ஊரடங்குச் சட்ட நேரத்தில் சங்கானை மதுபானக் கடை உடைக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சங்கானையில் உள்ள மதுபானக் கடை ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த இரவுநேரத்தில் உடைக்கப்பட்டு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மதுபான வகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகக் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### உரம் தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் பகுதியில் நெல்லுக்கு பாவிக்கப்படும் யூரியா, டி. டி. எம். ஆகிய உர வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அண்மையில் யாழ், மாவட்டத்தில் உரவாரம் கொண்டாடப்பட்டபோதும், இங்கு உரத்திற்கு தட்டுப்பாடு இருந்து வருவது ஆச்சரியத்துக்குரியதென்று விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம், உடுவில் கமநலச் சேவை நிலையம் ஆகியன இந்த உரத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மானிப்பாய் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு.ச. சிவகுமாரன் தெரிவித்தார்.

## அமைதி சமாதானம்ஏற்பட விசேஷ பூசை நடத்துக!

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டி சகல ஆலயங்களிலும் பிரார்த்தனையும், விசேஷ பூஜைகளும் நடாத்தும்படி யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவரும் இணுவில் சமாதானசபைத்தலைவருமான திரு. தி. சி. சண்முகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன் முன்னோடியாக இணுவில் இந்து மகா சபையினர் இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் விசேஷ அர்ச்சனை ஆராதனைகள் நடத்தியுள்ளனர்.

இதன்பின்னர் ஆலயத்தில் மேற்படி மகாசபையின் தலைவர் திரு. கே. எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு சண்முகலிங்கம் பேசுகையில் மேற்குறிப்பிட்ட வேண்டுகோளை விடுத்தார்.

தமிழ் இனம் இக்கட்டான ஒருகாலகட்டத்தில் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் தவறு ஏதும் செய்யாத அப்பாவிமக்கள் நாள்தோறும் இன்னலுக்குள்ளாகிறார்கள் என்றும் இந்த நிலையில் என்னசெய்வதென்றறியாது திகைத்துநிற்கும்மக்களை ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும் என்றும் திரு. ஆனந்தன் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார். (மா)

## "திருவாதிரை தினத்திலும் ஊரடங்கை தளர்த்துக"

### மணிவாசகர் சபை கோரிக்கை

(மானிப்பாய்)

இந்து மக்களின் விசேட தினங்களுள் ஒன்றான திருவெம்பாவை உற்சவகாலத்தில் வரும் மார்கழித் திருவாதிரைக்கு முதல்நாள் இரவு ஜனவரி மாதம் 5-ம் திகதி நடைபெறும் நடேசர் ஆருத்திராபிஷேக தினத்தன்று ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துமாறு கோரி காரைநகர் மணிவாசகர்சபை மகஜர் ஒன்றை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு அனுபபி வைத்துள்ளது.

ஈழத்துச் சிதமபரம் காரைநகர் சிவன்கோயில் உட்பட ஈழத்தின் பாடல்பெற்ற திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணஸ்வரம் முனீஸ்வரம் நகுலேஸ்வரம் கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் ஆலயம் போன்ற சிவாலயங்களிலும் மார்கழித் திருவாதிரை உற்சவம் சிறப்பாக நடைபெறுமென்றும் அம்மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திருவாதிரை தினத்திற்கு முதல் நாளிரவு இந்து மக்கள் மேற்படி சிவாலயங்களில் ஒன்றுகூடி நாட்டில் அமைதி, சமாதானம் நிலவுவதற்கும் மக்களின் சுபீட்சத்திற்கும் சாந்திக்கும் பிரார்த்திப்பதற்கு வசதியாக நத்தார் கிறிஸ்மஸ் தினத்தில் ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தியது போன்று திருவாதிரை தினத்திலும் ஊரடங்கு உத்தரவை நீக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு. செ. இராசதுரை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோருக்கும் இம்மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளதாக மணிவாசகர் சபையின் செயலாளர் திரு. ந. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

சிறில் மத்யூ கூறுகிறார் [redacted]

# என்னைவிட தொண்டமான் விஷயம் கேள்விக்குரியது!

(கொழும்பு)

''சிங்கள மக்களின் உரிமைக்காகப் போராட, வலுவான ஒரேயொரு அமைப்புத்தான் இந்த நாட்டில் இருக்க வேண்டும். கட்சி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.''

இவ்வாறு அண்மையில் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட திரு. சிறில் மத்தியூ கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இம் மகாநாட்டில் திரு. சிறில் மத்தியூ மேலும் தெரிவித்ததாவது:

''ஐ. தே. கட்சி நாட்டை காட்டிக் கொடுக்க முயல்கிறது. பிரிவினை ஆபத்திலிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டும்.

''இந்திய வெளியுறவு கொள்கை கமிட்டித் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியின் வேண்டுகோளுக்கிணங்கவே நான் பதவிநீக்கம் செய்யப்பட்டேன். இந்தியா இதனை மறுத்துள்ளது இந்தியா பொய்சொல்லுகிறது.

''தமிழ் நாட்டில பயங்கரவாதிகளின் முகாம்கள் இருப்பதை மறுப்பது போலவே எனது பதவிநீக்கம் தொடர்பான விடயத்தையும் மறுத்துள்ளது. மீண்டும் சொல்கிறேன் பார்த்தசாரதி தான் அமைச்சரவையிலிருந்து என்னை வெளியேறும்படி கூறினார்.

''நான் அமைச்சரவை சம்பிரதாயங்களை மீறவில்லை. என்னை பதவி நீக்கம் செய்தது அநீதியானது. அமைச்சர் தொண்டமானின் விடயம் எனது விடயத்தைவிட கேள்விக்குரியது.

''தமிழர்கள் மத்தியில் ஒரு கட்சிதான் இருக்கிறது. அது தமிழர் விடுதலை கூட்டணி தமிழ்த்தீவிரவாதிகளும் இக்கட்சியினருடன்தான் இருக்கிறார்கள்.

''பயங்கர வாதத்தை ஆரம்பித்ததே தமிழர் விடுதலை கூட்டணிதான். ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமது தவறை உணர்ந்து மீண்டும் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினால், அதுபற்றி ஆராய்வேன்'' என்றார். (இ)

### சமயச் சொற்பொழிவு

[சுழிபுரம்]

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு சென்றுசமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்திவரும் காரைநகரைச் சேர்ந்த வித்துவான் மு. சபாரத்தினம் திருவெம்பாவை நாட்களில் தினமும் இரு ஆலயங்களில் விரிவுரை செய்துவருகிறார் இவரது விரிவுரையை சென்று கேட்கும் மக்கள் தொகை அதிகமாகவுள்ளனர் என்றும், இவருக்கு நல்ல மதிப்பும், [illegible]

### மின்னொளி பெற்றது

[யாழ்ப்பாணம்]

அராலி வேப்பியணை தொடர் மாவத்தை விளையாட்டு மைதானவீதி நாச்சிமார் கோவிலடி வரை மின்னொளி பெற்றுள்ளது.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தின் தீவிர முயற்சியாலும், மின்சார சபை உயரதிகாரிகளின் நேரடி நடவடிக்கையாலுமேஇப்பகுதி விரைவில் மின்னொளி பெற்றது: அராலி நாச்சிமார் கோவிலுக்கான மின்சார சபை இணைப்பை திரு. தம்பிப்பிள்ளை யோகேந்திரராசா தமது சொந்தச் செலவில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னந் தோட்டத்தில் தேங்காய் கொள்ளை!

[கிளிநொச்சி]

இயக்கச்சியிலுள்ள தென்னந் தோட்டமொன்றில் பெருந்தொகையான தேங்காயையும், மற்றும் பொருட்களையும் கோஷ்டி ஒன்று துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இயக்கச்சி கோவில் வயல் வீதியிலுள்ள கணேஷ தோட்டத்திலேயே இந்தக் கொள்ளை நடந்துள்ளது.

துப்பாக்கியோடு வந்தவர் அங்கிருந்த காவலாளியைப் பயமுறுத்தி பொருட்களை அபகரித்துச் சென்றனர்.

இது தொடர்பாக திருட்டு நடாத்திய கோஷ்டியை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வடக்கு, கிழக்கில் இழப்புகளுக்கு நஷ்டஈடு!

(கொழும்பு)

கடந்த நவம்பர் 30-ம் திகதி முதல் இந்த ஆண்டு டிசம்பர் மாதம்வரை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உயிர் உடமைகளை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வு அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

ஒரு குடும்பஸ்தருக்கு அவர் உயிரிழக்கும் பட்சத்தில் 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அவரது வருடாந்த வருமானம் தொழில் வதிவிடம் பற்றிய தகவல்கள் தரப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட குடும்பஸ்தர் தரத்திலுள்ளவர்கள் ஊனமுற்றிருந்தால் 25 ஆயிரம் ரூபாய் வரையான நஷ்டஈடு வழங்கப்படும்.

மேலும் மேற்குறிப்பிட்ட தரங்களைச் சேர்ந்த குடும்பங்களில் மேலும் நான்கு பிள்ளைகளுக்கு தலா 5 ஆயிரம் நஷ்டஈடாக வழங்கப்படும்.

கலவர காலங்களில் சேதமாக்கப்பட்ட தொழில் நிலையங்கள், வீடுகள் அழிக்கப்பட்டிருந்தால், இவற்றின் பெறுமதிக்கு ஏற்ப புனர்வாழ்வு அமைச்சு அதிகாரியின் மதிப்பீடுகளுக்கு அமைய நஷ்டஈடு வழங்கப்படும் மற்றும் அசையக்கூடிய ஆதனங்கள்; இருப்பிலிருந்த ஆதனங்கள் என்பவற்றுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்.

நேரடியாகப் பாதிக்கப்படாத, பயம் காரணமாக தமது வதிவிடங்களை விட்டு வெளியேறியவர்களுக்கும் அவர்களின் இழப்புக்குறித்து நிருபணமான இழப்புகள்பற்றி தகவல் கொடுத்தால் அவற்றுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும்.

## சுழிபுரம் பிரஜைகள் குழுத்தலைவர் முயற்சி

[சுழிபுரம்]

சுழிபுரம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு வை. இராசசுந்தரம் சுழிபுரம், பண்ணாகம் கிராமங்களில் இராணுவத்தினர் கைதுசெய்த வாலிபர்களின் நலன்களைக் கவனிக்கும் நோக்குடன் கொழும்பு மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, அப்பாவிகளை விடுதலைசெய்ய கொழும்பு சென்றுள்ளார்.

கைதான ஒவ்வொரு இளைஞர்களின் முழுவிபரமும் திரட்டப்பட்டு உண்மையான பட்டியல் ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளார் கைதான இளைஞர்களின் தாய்மார்கள் கண்ணீரும் கம்பலையுமாக இவரை வழியனுப்பி வைத்தனர். இவர் இராணுவத்தளபதியை சந்திக்கவும், நடந்த சம்பவத்தை விளக்கவும் உள்ளார்.

## சிங்கள தட்டச்சு இயந்திரம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள அலுவலகத்திலிருந்து சிங்கள தட்டச்சு இயந்திரம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் ஜீப் ஒன்றில் சென்ற இனந்தெரியாத 5 நபர்கள் துப்பாக்கி முனையில் அங்கிருந்த ஊழியர்களைப் பயமுறுத்திவிட்டு தட்டச்சு இயந்திரத்தை எடுத்துச் சென்றுவிட்டார்களாம். மா)

0 0

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் சிங்கள தட்டச்சு இயந்திரம் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## தாராக்குளம் மக்கள்மீது துன்புறுத்தல்

[யாழ்ப்பாணம்]

தாராக்குளம் குடியேற்றத் திட்டப்பகுதியில் வசிக்கும் மக்கள் சில நபர்களால் துன்புறுத்தலுக்குள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊரடங்கு நேரங்களில் குறிப்பிட்ட சில நபர்கள் அவ்வீடுகளுக்குள் புகுந்து வீட்டில் வசிப்பவர்களை மிரட்டிவிட்டு, திருட்டு, கொள்ளை போன்ற சம்பவங்களில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

தொல்லைகளுக்குள்ளாகி வரும் அப்பாவிமக்கள் பீதியுடன் வாழ்ந்துவருவதாகவும் அப்பகுதியிலுள்ள சில நலன் விரும்பிகள் புகார் செய்துள்ளனர். (மா)


**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)



**றீகல் மினி**
10-15, 1-15
மோகன்-மாதவி
நடிக்கும்
பாலாஜியின்
**நிரபராதி**



இன்று முதல்
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
ஜெய்சங்கர்-நிர்மலா
சுந்தரராஜன்
**நீதிதேவன்**
(புத்தம் புதிய பிரதி)


## உழவுயந்திரம் கொள்ளை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரத்திலுள்ள குப்பை, கூளங்களை அகற்றுவதற்காகப் பாவிக்கப்பட்டு வந்த உழவு யந்திரம், சபை வளவில் இருந்து இம்மாதம் 18ந்திகதி யன்று, இனந் தெரியாதவர்களினால் கடத்திச்செல்லப்பட்டது.

இதனால் நகர வரியிறுப்பாளர்களுக்குச் செய்யப்படும் சேவை மிகவும் பாதிப்படைந்துள்ளது. நகரத்தின் வீதிகள். தெருக்கள் எல்லாம் குப்பை கூளங்கள் போடப்பட்டுள்ள நிலையிலே காட்சியளிக்கின்றது.

நகரத்தின் அத்தியாவசிய சேவைக்காக அன்றாடம் பாவிக்கப்படும் வாகனம் இல்லாததால் சபை தனது கடமைகளை மக்களின் திருப்திக்கேற்ற வாறு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


**ஸ்ரீதர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)



**வின்ஸர்** (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்(



**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன்,
ஸ்ரீதேவி
நடித்த
**சத்தியம்**
(ஈஸ்மன் கலர்)


# மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்

(யாழ்ப்பாணம்)

"மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்" யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இது ஐ. நா. சாசனத்தின் மனித உரிமைகள் பிரகடனத்தை இலங்கை அரசியற்சட்டவரம்புக்கு உட்பட்ட இயக்கங்கள் வாயிலாக வென்றெடுக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள அரசியற் கட்கிசார்பற்ற ஓர் வெகுஜன இயக்கமென அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த இயக்கம் வடக்கு-கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள மனித உரிமைமீறல்களைக் கட்டுப்படுத்த உள்ள ஒரேமார்க்கமாக நியாயமான அரசியற் தீர்வை வற்புறுத்தும் அதே வேளை, இத்தகைய மீறல்களில் பாதிக்கப்பட்டோருக்கு தன்னாலான உதவிகளை வழங்கி நிவாரணம்பெறவகை செய்யும் அங்குரார்ப்பணக் கூட்டத்தின் அங்கீகாரத்துடன் பொதுச்சபையும், மூன்று பேர் கொண்ட உத்தியோகத்தர் குழுவும் தெரிவு செய்யப்பட்டன. இப்பொதுச் சபையும் உத்தியோகத்தர் குழுவும் மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும் எனவும் அடுத்த பொதுச்சபைக்கூட்டத்தில் ஓர் செயற்கமிட்டி தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத் தலைவராக திரு. வை. இராஜசுந்தரமும் செயலாளராக சே. தேவராஜாவும் பொருளாளராக கே. நடனசபாபதியும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சிறுவன் படுகாயம்

[கொழும்புத்துறை]

பன்றிக்கு வைத்த கண்ணி வெடி சிறுவனைப் பதம் பார்த்தது. துணுக்காயில் இச் சம்பவம் நடைபெற்றது,

துணுக்காய் குடியேற்றத் திட்டத்தில் பன்றிக்கு கண்ணி வெடி வைக்கப்பட்டிருந்ததாகவும், இதனை அறியாது பாபு என்னும் 13 வயதுச் சிறுவன் விளையாடிக்கொண்டிருந்த போது அக் கண்ணி வெடி வெடித்ததாகவும், இதனால் சிறுவன் படுகாயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கண்ணிவெடிக்குள்ளான சிறுவன் பஸ் வண்டிமூலம் துணுக்காயிலிருந்து யாழ் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டு 25-ம் வாட்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## ஜனனியின் பிறந்தநாள்

ஜனனி சபா புஷ்பநாதன்



சுன்னாகம் 'தேவி வாசா' சபா புஷ்பநாதன்- சரோஜினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜனனி தனது முதலாவது பிறந்தினத்தை 29-12-84 இன்று கொண்டாடுகிறார். துர்க்கையின் அருளால் எல்லாச் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சவுதி மாமா, சித்தப்பாமார், சவுதி சித்தப்பா, மாமாமார், அன்ரிமார், டென்மார்க் சித்தப்பா, மச்சான்மார் லஜன், நிரோஜன, தனுஷன மறறும் உற்றார், உறவினர்கள் வாழ்த்துகிறார்கள். 1105


# Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.
நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

★ சாப்பாட்டு மேசை கதிரைகள்,
★ T. V. மேசை,
★ தண்ணீர்த் தாங்கி,
★ WASH BASIN,
★ TEAPOYS, ★ CENTRE TABLE,
★ VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்,

**TRADE CENTRE,**
**ஹோம் பினன்ஸ் லிமிட்.,**
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


## யாருடையது?

கோண்டாவில் திரு. கிட்டினபிள்ளை தர்மகுலசிங்கம், கொழும்புமலைவீதி திரு. சின்னப்பா தம்பித்துரை, கோண்டாவில் திரு ஆழ்வாப்பிள்ளை கிட்டினபிளளை, புங்குடுதீவு மேற்கு திரு கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை, குப்பிளான் திருமதி கமலாதேவி அருளம்பலம், பம்பர, கமலியன் கஹாவெல திரு. பாலசுப்பிரமணியம் கலாநாதன் ஆகியோரின் அடையாள அட்டைகளும் யாழ். கச்சேரிவீதி திரு. கே, பி. வநேந்திரராஜாவின் மேலதிகநேர உறுதிச்சீட்டும், ஒரு படுக்கைவிரிப்பு உட்பட சில துணிகள் ஆகியன 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் [illegible] பெற்றுக்கொள்ளவும்.


UNIQUE COMMUNICATION SERVICE

# யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக்

**24 மணிநேர சேவை**

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1.1 மகாத்மா காந்தி ரோட்.
(சலுசலவுக்கு அண்மையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ்.- 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கடலின் மேற் பகுதியில் அலை வீசுகிறது. மலை போன்று அது உயர எழுகிறது. ஆனால் ஆழமான அடி மட்டத்தில் அது அசைய திருக்கிறது. மனிதனுடைய உள்ளத்தின் அடிப்பகுதி அங்ஙனம் அசையா திருக்கவேண்டும். தெய்வ சாந்தி நிலவுவதற்கு அந்த அடிப்பகுதியே உற்ற இடமாகும்.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## தமிழ் மக்களின் ஏகோபித்த குரல்

கோழியா முட்டையா முந்திய தென்று முடிவற்ற தத்துவம் பேசிக் காலங்கழிக்கும் அரசுக்கு வட பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழு தீர்க்கமான விடை அளித்திருப்பதை எங்கள் நேற்றைய பிரசுரத்தில் படிக்கலாம்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு தொழிற்சங்கம் என்பதில் இருக்கும் விருப்பம் கம்யூனிசம் என்பதில் இருக்கும் விருப்பத்துக்கு நிகரெனலாம்.

ஒவ்வொரு கால கட்டத்தில் சில பதங்களுக்கு உண்டாகும் அவப்பேர் அக்காலத்துக்கப்பால் வாழும் பாக்கியம் பெற்றவர்களுக்கு எலும்புடன் அத்துவிதமாகிவிடுகிறது.

ஆனால் தொழிற்சங்கமோ கம்யூனிசமோ இலங்கைக்குப் புதுமையான பண்டங்கள்அல்ல;இவற்றை நியாய மற்றமுறையில் எதிர்த்துப் பரிகசிக்கவோ, அல்லது இவற்றில் கொண்டமோகத்தால் காரணமின்றி கங்கணம்கட்டவோ இலங்கை அரசியல் சூழ்நிலை இடமளிக்காது.

பல குறைகள் மலிந்த இந்நாட்டில் பாராளுமன்ற ஆட்சி, மற்றும் சில நாடுகளைப்போல சிரிப்புக்கிடமாகவில்லை. மக்களின் வாக்குரிமை கொண்டு ஆட்சிகளை மாற்றிவந்த மரபை நாம் மறக்க முடியாது.

இவ்வித மாற்றம் ஆட்சி அதிகாரத்தில் திளைத்தவர்களுக்கு ஒரு காஞ்சிரங்காய் என்பது அடிப்படை உண்மை.

1956ல் வீழ்ந்த ஐ. தே. கட்சியைக் கட்டி எழுப்பிய பெருமை பெரும்பாலும் ஜே ஆருக்கே உரியது. அதே போல் 1970ல் பொத்தெனப் பின்பும் வீழ்ச்சியடைந்த போது ஏழு வருடங்களாக அவர் எடுத்த முயற்சியும், அம்மையார் சிறிமாவோ தமது ஆட்சிக்குதவிய வீழ்ச்சியும் சங்கமித்ததாலே மீண்டும் 1977ல் பெரு வெற்றி கிட்டியது

வெயிலில்காய்ந்தவனுக்கு நிழலின் அருமை தெரியுமென்பதுபோல இத்தனை பாடுபட்டுக் கிடைத்த அமோக வெற்றி இன்று பாராளுமன்ற ஆட்சியை ஆட்டி வைக்கும் ஜனாதிபதியை ஏற்படுத்தியது. இதனை மாற்றியமைக்க ஒரு தேர்தல்சந்தர்ப்பம் அளிப்பதானல்இன்றையஆட்சிக்கு, அதில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவருக்கும் குலைப்பன் பிடிப்பது வியப்பா?

அது அவ்வாறிருக்க, இன்று நிலவும் நீண்டகால ஆட்சிக்கு தீர்க்கமுடியாத சவாலாகவுள்ளது தமிழ் இளைஞர்களின் இயக்கங்கள். தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதில் ஒற்றுமை உண்டென்பதால், இந்த இயக்கங்களின் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமென்றும், அதனை ஒழிக்க இயலாது திண்டாடும் இலங்கைராணுவத்தை நாட்டைப் பாதுகாக்கும் தேசிய சேவை என்றும் சொல்லப்படுகிறது.

வட பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்குச் சமர்ப்பித்திருக்கும் மகஜரைப் படிக்கும்போது நாட்டில் வாழும் தமிழ் மக்கள், இம்மகஜரில் பட்டியல் செய்திருக்கும் அக்கிரமங்களை மீட்டல் செய்வது. கொன்றது போதாதென்று, உடம்பின் அங்கங்களைத் துண்டாக்கும் துன்பம் போன்றது.

எப்பவோ எழுப்பவேண்டிய குரல் இப்பவாவது எழுப்பியிருப்பது பெரும் ஆறுதல். இது இங்கு வாழும் தமிழ் மக்களின் ஏகோபித்த குரல் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. குறிப்பாகக் குடும்பத் தலைவிகளின் இதயக் குமுறலுக்கு ஒரு 'ரைகர் பாம்' போன்றதெனலாம்.

நியாயம் விரும்பும் சிங்கள மக்கள், உங்கள் பயங்கரவாதத்தைத் தடுக்க என்ன செய்கிறீர்களென்று வினுவுவது நிச்சயம். சங்கடமான நிலையில் எழுப்பப்படும் சங்கடமான கேள்வி.

முட்டை என்னும் சமாதான வாழ்வு வேண்டுமென்றால் கோழியைக் கொல்லாதீர் என்று சொல்வதுடன், குறிப்பிட்ட மகஜரின் கோரிக்கைகளில், கோழி போன்ற கோரிக்கை-"வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கத் தீர்வொன்று வேண்டும்"— நிறைவேற்றுவதாலேயே அரசு குறிப்பிடும் (பயப்படும்) பயங்கரவாதம் ஒழிக்கப்படும்

நாட்டைப் பிரிப்பதுபற்றிப் பூசல் கிளப்பும் தென்னிலங்கை இயக்கங்களும் மக்களும் அதை ஒரு சாட்டாய்வைத்த இந்த நியாயமான கோரிக்கையை அலட்சியம் செய்கின்றனர்.

இதனால் நாட்டுக்கு ஆபத்து; அது தமிழ் மக்களுக்கும் ஆபத்தென்பதை நாம் நன்ருக உணர்கின்ரேம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம, சிவன்கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்க அச்சகத்தில் 1984-ம்ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளிபிடப்பட்டது Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Ee anadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389 24126.

## அடல்பிஹாரி வாஜ்பாய் தோல்வி

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு அடல் பிஹாரி வாஜ்பாய் தோல்வியடைதுள்ளார்.

கடந்த தேர்தல்களில் புதுடில்லியில் இவர் போட்டியிட்டார். ஆனல் இம் முறை மத்திய பிரதேஷ் மாநிலத்திலுள்ள கிவாலியர் தொகுதியில் போட்டியிட்டார். பாரதீய ஜனதாக் கட்சித்தலைவரான திரு. வாஜ்பாய் 25 ஆயிரம் பெரும்பான்மை வாக்குகளில் இ. காங்கிரஸ் வேட்பாளரால் தோற்கடிக்கப்பட்டார். இவர் ஜனதா அரசில் வெளிவிவகார அமைச்சராக இருந்தவர் என்பது தெரிந்ததே. (கி)

## புதுடில்லி 7 தொகுதி...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

தைதவிட கூடுதலாகச் சீக்கியர்கள் புதுடில்லியில் வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

இங்கு சகல தொகுதிகளிலும் இ. காங்கிரஸ் தெரிவு செய்யப்பட்டதையடுத்துப் பலத்த மகிழ்ச்சி ஆரவாரம் காணப்பட்டது. வாகனங்கள் 'ஹோன்களை அடித்து ஒலியெழுப்பின. வீதிகளில் மக்கள் ஆடிப்பாடி வெற்றியைக் கொண்டாடியதைக் காண முடிந்தது. (கி)

## ரஜீவிடம்...

(1-ம் பக்க5ம்கலத்தொடர்ச்சி)

காந்தி அமேதியில் பெரியளவில் தேர்தல் பிரசாரம் எதனையும் மேற்கொள்ளமுடியாதிருந்தாரென்பது குறிபபிடத்தக்கது. (கி)

## கொழும்பு...

(1-ம் பக்க3ம்கலத்தொடர்ச்சி)

இராணுவத் தலைமையகம் வவனியாவுக்கு இடம் மாற்றப்படும்" என்றார்.

## பலாலியில் இராணுவ வைத்தியசாலை

இதே வேளை பலாலி இராணுவமுகாமில் இராணுவ வைத்தியசாலை யொன்றும் நிறுவப்படவிருக்கிறது. இது அதி நவீன வசதிகளைக் கொண்டிருக்கும் இந்த வைத்தியசாலை அமைப்பு நிதிக்கென கொழும்யில் நேற்று கதம்ப நிகழ்ச்சியொன்றும் நடத்தப்பட்டது. (கி)

## எம். ஜி. ஆருக்கு இலேசான காய்ச்சல்

(நியுயோர்க்)

நியுயோர்க் புறுக்ளின் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்கு நேற்று முன்தினம் இலேசான காய்ச்சலும் இருமலும் காணப்பட்டது.

தேர்தல் செய்திசளை அவர் மிகவும் உன்னிப்பாக கேட்டறிவதாக அவரது துணைவியார் திருமதி. ஜானகி ராமச்சந்திரன் தெரிவித்தார்.

## அருண் நேரு வெற்றி

இந்திரா காங்கிரஸ்கட்சியின் பொதுச்செயலாளர்களில் ஒருவரான திரு அருண்நேரு ராய்பரேலி தொகுதியில் அமோக வெற்றிபெற்றுள்ளார். ஒரு லட்சம் அதிகப்படியான வாக்குகளால் இவர் வெற்றி பெற்றுள்ளார். (கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஜிவ்...

[1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

யிட்ட ஹிந்தி திரைப்பட நடிகர் திரு. சுனில்தத் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட இவர் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளரை ஒரு லட்சத்து 25 ஆயிரம் வாக்குகளால் தோற்கடித்துள்ளார். (கி)

## கேரளாவில் பூரண வெற்றி

[திருவனந்தபுரம்]

கேரள மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி லோக்சபா தேர்தல்களில் பூரண வெற்றி பெற்றுள்ளது.

இம்மாநிலத்தில் 20 லோக்சபா தொகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களே வெற்றிபெற்றுள்ளனர்

1980ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஆறு லோக்சபா இடங்களே இக்கட்சிக்கு இங்கு கிடைத்தனவென்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## தோல்வியும் வெற்றியும்

[புதுடில்லி]

இந்திய உள்துறை அமைச்சர் திரு. நரசிம்மராவ் ஆந்திராவிலுள்ள தமது அனந்கொண்டா தொகுதியில் தோல்வியடைந்துள்ளார்.

ஆனல் அவர் தாம் போட்டியிட்ட மகாராஷ்டிராவில் உள்ள மற்ருெரு தொகுதியில் 2 லட்சம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார். (கி)

## அமிதாப்பச்சனிடம் பஹுகுணா தோல்வி

உத்தரப்பிரதேஷ் மாநிலத்தில் உள்ள அலகபாத் தொகுதியில் பிரபலம் மிக்க அரசியல் வாதியான திரு. ஹேம் நந்தன் பஹுகுணா நடிகர் அமிர்தாப்பச்சனல் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

திரு பஹுகுணா 1952-ம் ஆண்டில் இடம்பெற்ற முதலாவது இந்தியப் பொதுத் தேர்தலிலிருந்து தோற்கடிக்கப்படாத ஒரு அபேட்சகராக இருந்து வந்துள்ளார். இவரை இந்தியாவின்மிகப்பிரபலமான ஹிந்தி நட்சத்திரமான திரு. அமிதாப்பச்சன் இத்தடவை மிக இலகுவாக இ. காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்றுள்ளார். (கி)

## அச்சுவேலி சம்பவம்

(கோப்பாய்)

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளர் கடமை நேரத்தில் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முகாமையாளர் ச. மகேஸ்வரனின் (28 வயது) சடலம், கடமை புரிந்துகொண்டிருந்த கதிரையில் சரிந்த நிலையில் காணப்பட்டது.

கிளையில் விற்பனையாளராகக் கடமையாற்றிய கு. தர்மலிங்கம் பலத்த தாக்குதலுக்குள்ளாகி காயங்களுடன் வைத்திய சிகிச்சை பெற்றுவருகின்ருர்.

## மாணவர் நிலை குறித்து ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். ம வட்டக் கிளை இன்று சனிக்கிழமை காலை கூடி க. பொ. த. [சாதாரண] பரீட்சையில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நிலை குறித்து ஆராயவுள்ளது.

## மு. கணபதிப்பிள்ளை காலமானர்

(கொழும்பு)

பிரபல எழுத்தாளரும், சைவ அறிஞருமான தென் புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்றுக் காலமானர். அவருக்கு வயது 63 ஆகும்.

சிறிது காலமாக இருதய நோய் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த அவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு நேற்று மாலை 4 மணியளவில் காலமானர்.

தகனக் கிரியைகள் நாளை காலை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### திருமதி அக்னஸ் சூசைப்பிள்ளை

யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயம் இளைப்பாறிய ஆசிரியை திருமதி அக்னஸ் சூசைப்பிள்ளை அவர்கள் காலமானர். இவர் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், சூ. யோ. பற்றிமாகரன் (ஆசிரியர் யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி றீற்ரு பற்றிமாகரன் (முன்னுள் ஆசிரியை கொழும்பு. சென். ஜோசவ்ஸ் கல்லூரி) அவர்களின் அன்பு மாமியாருமாவார். அன்னரின் பூதவுடல் இன்று (29-12-84) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 466/7 யாழ் சஞ். யுவானியார் ஒழுங்கை இல்லத்திலிருந்து சஞ். யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பலிப்பூசையின் பின்னர் யாழ் கொஞ்சேஞ்சி மாதா மேக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். 1152

## மரண அறிவித்தல்

### அன்னபகவதி சுப்பையா

தெல்லிப்பளையைச் சேர்ந்த அன்னபகவதி சுப்பையா அவர்கள் 25-12 84 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானர். இவர் காலம்சென்ற Dr A. சுப்பையாவின் அன்பு மனைவியும், காலம்சென்ற ராஜலக்ஷ்மி, பாலசுந்தரம் (Brunei), ஜெயலக்ஷ்மி (Colombo), Dr. பாலகிருஷ்ணன் (Pointpedro) ஆகியோரின் அருமைத் தாயாரும், ராஜசிங்கம் [U. K.], கீதா (Brunei), காலம் சென்ற கனகரட்ணம், பொன் ஆகியோரின் மாமியாரும் ஆவார். இவரின் ஈமக்கிரியைகள் யாழ்ப்பாணத்தில் 25-12-84 அன்றைய தினமே நடைபெற்றன.

1151